**தமிழ்நாடு அரசு**

சுருக்கம்

சுற்றுச்சூழல் – நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் – **8.5.98** ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 127க்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**சுற்றுபுறம் & வனத் (சுக 3) துறை**

**அரசு ஆணை (1டி) எண். 223** **நாள்: 2.9.98**

**பார்வை:**

1. 30.3.89 ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 213.
2. 8.5.98 ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 127.

**ஆணை:**

30. 3.89 ஆம் ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 213 இல் இன்ன பிறவற்றுடன், இவ்வாணையில் இணைப்பு 1 இல் கண்டுள்ள 14 வகையான தொழிற்சாலைகள் இவ்வாணையில் இணைப்பு II இல் கண்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து 1 கி. மீட்டர் தூரத்திற்குள் நிறுவப்பட அனுமதி அளித்தல் கூடாது என்று ஆணையிடப்பட்டது. பின்னர் **8.5.98** ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 127 இல் இன்ன பிறவற்றுடன் காவிரி மற்றும் அதன் உபநதிகள், பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகளிலிருந்து 5 கி. மீட்டர் தூரத்திற்குள் நீரை அதிகஅளவில் மாசுப்படுத்தும் எந்த தொழிற்சாலையும் (சிவப்பு வகை) நிறுவப்பட அனுமதி அளித்தல் கூடாது என்று ஆணையிடப்பட்டது.

2. 30.03.89 ஆம் ஆம் நாளிட்ட அரசாணையின் இணைப்பு 1 இல் கண்டுள்ள குறிப்பாக 14 வகைதொழிற்சாலைகள் இந்த **8.5.98** ஆம் நாளிட்ட அரசாணையில் கண்டுள்ள முக்கிய நீர் ஆதாரங்களிலிருந்து 5 கி. மீட்டர் தூரத்திற்குள் அமைக்க அனுமதித்தல் கூடாது என்று அரசு கருதுவதால் **8.5.98** ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 127க்கு கீழ்க்கண்ட திருத்தத்தை அரசு இவன் வெளியிடுகிறது.

**திருத்தம்**

**8.5.98** ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 127 இல் பத்தி 5 துணைப்பத்தி 2 இல் கண்டுள்ள சொற்டொடரான " தமிழ்நாட்டில் முக்கிய நீர் ஆதாரங்களாக காவிரி மற்றும் அதன் உபநதிகள், பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகளிலிருந்து 5 கி. மீட்டர் தூரத்திற்குள் நீரை அதிகஅளவில் மாசுப்படுத்தும் எந்த தொழிற்சாலையும் (சிவப்பு வகை) நிறுவப்பட அனுமதி அளித்தல் கூடாது". இதற்குப் பதிலாக கீழ்க்கண்ட சொற்டொடரைப் படிக்கவும். "தமிழ்நாட்டின் முக்கிய நீர் ஆதாரங்களான காவிரி மற்றும் அதன் உபநதிகள், பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி நதிகளிலிருந்து 5 கி. மீட்டர் தூரத்திற்குள் **30.3.89** ஆம் நாளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை ( நிலை) எண். 213 இன் இணைப்பு 1 இல் கண்டுள்ள 14 வகையான தொழிற்சாலைகள் நிறுவப்பட அனுமதி அளித்தல் கூடாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. எஸ். ஸ்ரீபதி**
**அரசுச் செயலாளர்**